பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**07 08 2026** **FRIDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

**1)** கைத்தறி ஆடைகள் பயன்பாட்டிற்கு அனைவரும் ஊக்கம் அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

**2)** பாதுகாப்பான ரயில் பயணத்திற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**3)** கால்நடை மருத்துவப்படிப்புகளுக்கு பொது நுழைவுத்தேர்வு நடத்தும் முடிவினை கைவிட வேண்டும் என்று முதலமைச்சர் திரு விஜய், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

**4)** மத்திய அரசின் திட்டங்கள் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை தவெக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி கேட்டுக்கொண்டுள்ளது.

**5)** ஆசிய **Aerobic** ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ariha Pangambam** தங்கப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

- இனி விரிவான செய்திகள்-

<<<<<<<>>>>>>>

கைத்தறி ஆடைகள் பயன்பாட்டிற்கு அனைவரும் ஊக்கம் அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

தேசிய கைத்தறி தினத்தையொட்டி, சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள காணொலி பதிவில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

*(Sound Byte — Modi — 57 Sec.)*

<<<<<<<>>>>>>>

பாதுகாப்பான ரயில் பயணத்திற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக ரயில் விபத்துகள் வெகுவாக குறைந்துள்ளதாக கூறினார்.

2014-ஆம் ஆண்டு 135-ஆக இருந்த ரயில் விபத்துகளின் எண்ணிக்கை, தற்போது இரண்டாக இருப்பதை சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பான ரயில் பயணத்திற்காக ஐந்து லட்சத்து 41 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான மதிப்பில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<<>>>>>>>

கால்நடை மருத்துவ பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கையை பிளஸ்-டூ தேர்வு மதிப்பெண் அல்லது மாநில அரசுகளால் தீர்மானிக்கப்படும் முறையில் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு விஜய், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

கால்நடை மருத்துவ அறிவியல் படிப்பிற்கான மாணவர் சேர்க்கை பொது நுழைவுத் தேர்வின் அடிப்படையில் நடைபெற வேண்டும் என்று இந்திய கால்நடை மருத்துவக்குழுமம் பரிந்துரைத்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

நடப்பு கல்வியாண்டில் நுழைவுத்தேர்வு நடத்த முடியாத பட்சத்தில் நீட் தேர்வின் தரவரிசை பட்டியலின் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இது தமிழகத்திற்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துவதாக அவர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொது நுழைவுத்தேர்வு நடத்த வேண்டும் என்ற இந்திய கால்நடை மருத்துவக்குழுமத்தின் முடிவினை மறுபரிசீலனை செய்ய பிரதமர்

அறிவுறுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

மத்திய அரசின் திட்டங்கள் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை தவெக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் பிரதமரின் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் வீடுகளை கட்டாமல், 21 லட்சம் ரூபாயை முறைகேடு செய்திருப்பதாக வெளியான செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

முந்தைய திமுக ஆட்சிக்காலத்தில் நிலவிய ஊழல் கலாச்சாரமும், அதிகாரிகளின் மெத்தன போக்குமே இத்தகைய முறைகேடுகள் துணிச்சலாக நடைபெற காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏழை மக்களுக்காக மத்திய அரசு வழங்கும் நிதியை சுரண்டுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் இருப்பதை தடுப்பதோடு, முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது தவெக அரசு கடும்

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

டாஸ்மாக் மதுபானக் கடைகளில் கூடுதல் தொகை வசூலித்தால், சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது நுகர்வோர்கள் புகார் அளிக்கலாம் என்றும், இதுதொடர்பாக உடனடியாக வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றம், காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கு நீதிபதி திரு இளந்திரையன் முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, மது வாங்கியபோது ரசீது வழங்கப்படவில்லை என்றும், கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டதாகவும் மனுதாரர் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

மதுபானங்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டது தொடர்பாக அளிக்கப்பட்ட புகார் மீது லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்றவர்களுக்கு ஜப்பான் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு வழங்க வகை செய்யும் ஒப்பந்தம் இன்று சென்னையில் கையெழுத்தானது.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு முகமது ஃபர்வேஸ் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்ற மாணவர்களுக்கு சிறப்பு தொழில்நுட்ப பயிற்சி அளித்து அந்த நிறுவனத்திலேயே வேலைவாய்ப்பு வழங்க இந்த ஒப்பந்தம் வகை செய்வதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிக்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிக்கான இயக்குநர் திரு எம். சுந்தரேஷ் பாபு கேட்டுக்கொண்டுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — எம் சுந்தரேஷ் பாபு - 52 Sec.)***

<<<<<<<>>>>>>>

கோவை, நீலகிரி, தேனி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு

மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 45 Sec.)***

<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தாய்பால் வார விழா ஆட்சியர் திரு மதுபாலன் தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

திருநெல்வேலியில் கைத்தறி கண்காட்சி மற்றும் தள்ளுபடி விற்பனையை ஆட்சியர் திரு ஆனந்த் மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

ஈரோடு மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகன சேவையை ஆட்சியர் திரு கந்தசாமி இன்று தொடங்கிவைத்தார்.

---------------

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிறப்பு தொழில் பழகுநர் சேர்க்கை முகாம் வரும் **10-**ஆம் தேதி நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திரு மணீஷ் நரவனே கூறியுள்ளார்.

---------------

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா திருவிழா வரும் **29-**ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்க உள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்த ஆலேசானை கூட்டம் ஆட்சியர் திரு பிரவீன்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

----------

சேலம் கோட்டைமாரியம்மன் கோவில் திருத்தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

-----------------

ஓணம் பண்டிகையையொட்டி **112** சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய **Aerobic** ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ariha Pangambam** தங்கப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

பிலிப்பைன்சில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---------------

உலக **Sepak Takraw** சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

---------------

ஆசிய ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Anmol Ekka** தலைமையிலான இந்த அணியில் **20** பேர் இடம்பெற்றுள்ளனர்.

**<<<<<<<<END>>>>>>>>**